கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

முன்னிலை - திரு.P. கணேசன், B.A., B.L., D.L.L.,

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண் 76 / 2023

தமிழ்நாடு, தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, கனரா வங்கி, பெரியகுளம் கிளையில் முதன்மை மேலாளராக பணிபுரியும் நாகேந்திரன் மகன் இந்து சுமார் 41 வயதுள்ள N. விக்னேஷ்

...... வாதி

-எதிர்-

1. தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, பெரியகுளம். வடக்கு அக்ராகரம் தெரு, கதவு எண்.153 -ல் வசிக்கும் சீதாராமன் மனைவி இந்து சுமார் 77 வயதுள்ள S. விஜயகுமாரி,

2. தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, பெரியகுளம். வடக்கு அக்ராகரம் தெரு, கதவு எண்.153 -ல் வசிக்கும் சீதாராமன் மகன் இந்து சுமார் 52 வயதுள்ள A.S. ராமகிருஷ்ணன்.

........ பிரதிவாதிகள்

இவ்வழக்கின் வாதிக்கு, பிரதிவாதிகள் ரூ.12,24,335/-ஐ வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதிவரை வருடம் 9.55% தொடர்வட்டியுடன் செலுத்தக் கோரியும், வழக்கின் செலவு தொகை கோரியும், இவ்வழக்கின் உண்மைக்கும், தன்மைக்கும் ஏற்ப இதர பரிகாரம் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் எழுந்த நாள் : 09.12.2003, 15.10.2006, 02.04.2009, 28.02.2012, 29.01.2015, 04.02.2017, 24.11.2021 & 02.02.2020 பெரிகுளத்தில் உற்பத்தி.

வழக்கு தாக்கலான நாள் : 08.03.2023 & 14.03.2023

நீதிமன்ற முத்திரைக் கட்டணம்

நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்புக்கிற்கான மதிப்பு ரூ.12,24,335/- மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 22 மற்றும் அட்டவணை I, ஆர்டிக்கிள் 1ன் படி ரூ.36,731/- நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது என் முன்பாக 13.09.2023 ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. முருகதினகரன் அவர்கள் ஆஜராகியும், முதல் பிரதிவாதிக்கு படிமெமோ அனுப்பியும் முதல் பிரதிவாதி விலாசத்தில் இல்லாததாலும், 2 வது பிரதிவாதி இறந்து விட்டபடியால், வாதி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததாலும் இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

## தீர்ப்பாணை

1. இரண்டாம் பிரதிவாதி இறந்து விட்டபடியால் இவ்வழக்கு அற்றுப்போய் விட்டதாக உத்தரவிடப்படுகிறது.

2 செலவு தொகை இல்லை.

செலவுத்தொகை பட்டியல் : தாக்கல் இல்லை.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்) P.கணேசன்

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பெரியகுளம்

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்
அசல் வழக்கு எண் 76/2023
தீர்ப்பாணை நாள் 13.09.2023.